**ON HYBRID VC FROM SULUR COURT PREMISES, E-SEWA KENDRA**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 321/2019** |
| Deposition of witness | : | **PW-6** |
| Name | : | தங்கவேல் |
| Father Name | : | காளியப்ப கவுண்டர் |
| Age | : | **58** |

*Accused absent.*

*Remote Site Co-ordinator :* காயத்ரி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 09.03.2026.

<u>மனுவின் பெயரில்  சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>

1. எனது விசாரணையின் போது சாட்சி சகுந்தலா தார் சாலையில் நடந்து சென்றதாக கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். மாதிரி வரைபடத்தில் ராஜலட்சுமி பேக்கரி அருகே டீக்கடை இருப்பதாக காட்டியுள்ளேனா என்றால்  காட்டவில்லை. சாட்சி சகுந்தலா அச்சமயத்தில் ரோட்டோரமாக நடந்து சென்றதாக எனது விசாரணையில் கூறியிருந்தால் அது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது விசாரணையில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தில்  லோடு இருந்ததா வாகனத்தில் வேறு யார் பயணித்தார்கள் போன்ற விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

2. விபத்தில் சம்பந்தப்பட்ட தோஸ்த் வாகனத்தில் சேதாரம் இருப்பதாக

மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி மிதமான வேகத்தில் அவரது சாலையில் தான் வந்து கொண்டு இருந்தார் என்றாலும், எதிரியின் மீது தவறு எதுவும் இல்லை என்றாலும், புகார்தாரருக்கு நஷ்ட ஈடு பெற்று தர வேண்டி அவருக்கு ஆதரவாக தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை சொன்ன விதத்தில் விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் கவன குறைவாகும் அஜாக்கிரதையாலும் விபத்து நிகழவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.03.09 15:55:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,

ஊத்துக்குளி.